සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

යුරෝපා ඉතිහාසය II (I කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி I)
History of Europe II (Part I)

25 B | T | II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

ஐரோப்பிய வரலாறு - கிரேக்க - உரோம காலம் முதல் கி.பி. 1989 வரை

சுட்டெண் : ................................

**அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் பகுதி **I**, பகுதி **II** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டது.
* பகுதி **I** இல் **1 - 40** வரையான எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** வழங்கப்பட்ட **அறிவுறுத்தல்களுக்கமைய** விடைகளை எழுதுக.
* பகுதி **I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், **பகுதி I** இற்கான விடைத்தாள்களை **பகுதி II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 3 | |
| 2 | 4 - 15 | |
| 3 | 16 - 20 | |
| 4 | 21 - 25 | |
| 5 | 26 - 30 | |
| 6 | 31 - 40 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி I

* **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**1.** (1) அல்ப்ஸ் (2) அபினைன் (3) மைசீனியன்
(4) கார்பேதியன் (5) கோகஸஸ் (......)

**2.** (1) தேலீஸ் (2) பைதகரஸ் (3) ஹெரக்லீடஸ்
(4) டிமொக்கிறட்ஸ் (5) செனகா (......)

**3.** (1) அக்குராபொலிஸ் (2) அகடெமி (3) லைசியம்
(4) சலேர்னோ (5) பொலொக்ஞா (......)

Past Papers Wiki



**4.** (1) எட்ரஸ்கன் (2) கோல் (3) அம்பிரியன்
(4) இலத்தீன் (5) சம்னையிட் (……)

**5.** (1) குலோடியஸ் (2) ட்ராஜன் (3) சிசரோ
(4) டயோகிளீசியன் (5) ஜஸ்ரீனியன் (……)

**6.** (1) புர்போன் (2) ஹொஹென்சொலர்ன் (3) தியூடர்
(4) கொன்சாகா (5) சவோய் (……)

**7.** (1) கொன்ஸ்தாந்திநோப்பிள் (2) ஜெனோவா (3) வெனிஸ்
(4) புளோரன்ஸ் (5) மிலான் (……)

**8.** (1) கஸ்டீல் (2) அரகன் (3) நவார்
(4) கிரனடா (5) டூலோன் (……)

**9.** (1) முதலாளித்துவம் (2) தாராளவாதம் (3) ஒரு கடவுள் கொள்கை
(4) சமூகவுடைமைவாதம் (5) அராஜ வாதம் (……)

**10.** (1) கோல்பர்ட் (2) ரோபெஸ்பியர் (3) கலோன்
(4) டர்கோ (5) நெகர் (……)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள் வீதம்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**11.** (1) சொபொக்ளிஸ் - ஈடிபெஸ் றெக்ஸ்
(2) பிளேட்டோ - குடியரசு
(3) வர்ஜில் - ஈனிட்
(4) தாந்தே அலிகியெரி - தெய்வீக நகைச்சுவை
(5) வொல்ட்ரயர் - அரசு பற்றிய இரண்டு கட்டுரைகள் (……)

**12.** (1) மசிடோனியன் பேரரசு - மகா அலெக்சாந்தர்
(2) உரோம பேரரசு - ஒகஸ்தஸ்
(3) பைசாந்தியான் பேரரசு - கொன்ஸ்ரன்ரைன்
(4) கரோலின்ஜியன் பேரரசு - சார்ளிமென்
(5) ஜெர்மனிய பேரரசு - விக்டர் இமானுவேல் (……)

**13.** (1) ஜுபிடர் - வானத்தின் அதிபதி
(2) மினெர்வா - ஞானத்தின் அதிபதி
(3) வீனஸ் - வேட்டையாடுதலின் அதிபதி
(4) மார்ஸ் - போரின் அதிபதி
(5) நெப்டியூன் - கடலின் அதிபதி (……)

**14.** (1) கிறிஸ்தோபர் கொலம்பஸ் - கிழக்கிந்திய தீவுகளைக் கண்டுபிடித்தல்.
(2) அமெரிக்கோ வெஸ்புக்குயி - அமெரிக்க பிரதான நிலப்பகுதி கண்டுபிடித்தல்.
(3) வஸ்கொட பல்போவா - பசுபிக் சமுத்திரம் கண்டுபிடித்தல்.
(4) பெர்டினன் மகலன் - உலகைச் சுற்றி வலம் வருதல்.
(5) ஹர்னன்டோ கோடிஸ் - மெக்ஸிக்கோவை கைப்பற்றுதல். (……)

**15.** (1) ஜோன் கே - பறக்கும் தறி
(2) ஜேம்ஸ் ஹார்கிறிவ்ஸ் - நூல் நூற்கும் ஜென்னி
(3) ஜேம்ஸ் வோட் - பாதுகாப்பான விளக்கு
(4) வில்லியம் சீமன்ஸ் - திறந்த உலை செயன்முறை
(5) ஜோர்ஜ் ஸ்ரீவன்சன் - புகையிரத என்ஜின் (……)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத்** தெரிவுசெய்து **அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**16.**

| X | Y |
|---|---|
| (i) புரோட்டகரஸ் | A - 'மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான்; எல்லா இடங்களிலும் அவன் சங்கிலியால் கட்டப்பட்டுள்ளான்.' |
| (ii) சோக்கிரதீஸ் | B - 'மனிதன் அரசியல் மிருகம்' |
| (iii) பிளேட்டோ | C - 'நற்குணங்களே அறிவு.' |
| (iv) அரிஸ்டோட்டில் | D - 'அனைத்தையும் அளக்கும் கருவி மனிதனேயாகும்' |
| (v) ரூசோ | E - 'தத்துவஞானிகள் மன்னர்களாக வேண்டும்' |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDBCA (……)

**17.**

| X | Y |
|---|---|
| (i) இத்தாலி | A - அங்கிலிக்கன் |
| (ii) கிரேக்கம் | B - புரட்டஸ்தாந்து |
| (iii) துருக்கி | C - பழமை பேணுதல் |
| (iv) இங்கிலாந்து | D - உரோமன் கத்தோலிக்கம் |
| (v) நெதர்லாந்து | E - இஸ்லாம் |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (……)

**18.**

| X | Y |
|---|---|
| (i) நிக்காலோ மக்கியவெல்லி | A - உயிரிகளின் மூலம் (Origin of Species) |
| (ii) மொன்டெஸ்கியு | B - தாஸ் கெப்பிட்டல் (Das capital) |
| (iii) சார்ள்ஸ் டார்வின் | C - போரும் சமாதானமும் |
| (iv) கார்ள் மாக்ஸ் | D - இளவரசன் |
| (v) லியோ ரொல்ஸ்டாய் | E - சட்டங்களின் ஆன்மா (The Spirit of the Laws) |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (……)

**19.**

| X | Y |
|---|---|
| (i) இருண்ட கண்டம் | A - துருக்கி |
| (ii) புதிய உலகம் | B - இத்தாலி |
| (iii) கடைக்காரர்களின் தேசம் | C - அமெரிக்க கண்டம் |
| (iv) வெறும் புவியியல் கூற்று | D - ஆபிரிக்க கண்டம் |
| (v) ஐரோப்பாவின் நோயாளி | E - இங்கிலாந்து |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EBDCA (5) EDACB (……)

PAST PAPERS WIKI

**20.**

| X | Y |
|---|---|
| (i) ஜோசப் ஸ்டாலின் | A - ஐக்கிய அமெரிக்க அரசுகள் |
| (ii) ஹரி ட்ரூமன் | B - ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு |
| (iii) கிளமெண்ட் அட்லி | C - பிரான்ஸ் |
| (iv) சார்ள்ஸ் டி கோல் | D - பிரித்தானியா |
| (v) கொன்ட்ரட் அடினோர் | E - சோவியத் யூனியன் |

(1) DCEAB (2) DCEBA (3) DEABC (4) EADCB (5) EDACB (……)

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது.** அதனைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரேயுள்ள **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**21. ஐரோப்பாவில் இஸ்லாமிய நாகரிகத்தின் செல்வாக்கு**

(1) பாரசீக கவிதைகளில் விசேடமாக ரூபய்யாட்டின் செல்வாக்கு
(2) உரோம இலக்கங்களின் அறிமுகம்
(3) நீர்ப்பாசன தொழினுட்பம் மற்றும் கடதாசி உற்பத்தி போன்ற இஸ்லாமிய தொழினுட்பங்களை உள்வாங்குதல்.
(4) அராபியர்களிடமிருந்து வாசனைப் பொருள்கள், கம்பளங்கள் மற்றும் துணிகள் என்பவற்றை பெற்றுக்கொள்ளுதல்.
(5) பெருமளவு அரபு சொற்களைப் பயன்பாட்டில் கொள்ளுதல். (……)

**22. மானிய முறை**

(1) மத்திய கால ஐரோப்பாவின் அரசியல், பொருளாதார முறைமை மானியமுறை என அழைக்கப்பட்டது.
(2) மானிய முறையின் கீழ் அரசியல் பரவலாக்கல் முறைமையை காணக்கூடியதாக இருந்தது.
(3) மானிய முறைத்தொடர்புகள் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு நிலவியது.
(4) முடிக்குரிய நிலங்களை அனுபவித்த பிரபுக்கள் போர்க் காலங்களில் மன்னர்களுக்கு இராணுவ வீரர்களை வழங்கினார்கள்.
(5) மானிய முறையின் கீழ் மிகவும் வளர்ச்சியடைந்த வர்த்தகம் காணப்பட்டது. (……)

**23. சீர்திருத்த இயக்கம்**

(1) இத்தாலியில் ஆரம்பமானது.
(2) சீர்திருத்த இயக்கம் என்பது உண்மையில் கத்தோலிக்க தேவாலயங்களின் ஊழல்களுக்கு எதிராக எழுந்த எதிர்ப்பு இயக்கமாகும்.
(3) மாட்டின் லூதரினால் விட்டன்பேர்க் தேவாலயத்தின் கதவில் தொண்ணூற்றைந்து விடயங்கள் காட்சிப்படுத்தலே சீர்திருத்த இயக்கத்தின் ஆரம்பத்தைக் குறிப்பிடுகிறது.
(4) ஜோன் கல்வின் புரட்டஸ்தாந்துவாதத்தை பிரசாரம் செய்தார்.
(5) சீர்திருத்த இயக்கம் மத்திய ஐரோப்பாவில் நிலவிய சமய ஒன்றிணைப்பை முடிவுக்குக் கொண்டு வந்தது. (……)

**24. பிரான்சிய புரட்சி**

(1) 'பழமையான ஆட்சி' முறைக்கு எதிராக சமூகத்தில் நிலவிய பல்வேறுபட்ட குழுக்களின் செயற்பாடே பிரான்சிய புரட்சிக்கான பிரதான காரணமாகும்.
(2) பிரான்சிய புரட்சி பாட்டாளி மக்களின் புரட்சியாகக் கருதப்படுகிறது.
(3) புரட்சியின் தலைவர்கள் சிலர் அமெரிக்கப் புரட்சியின் முன்மாதிரியைப் பெற்றனர்.
(4) பிரான்சிய புரட்சியின் போது புர்போண் முடியாட்சி அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டது.
(5) பிரான்சிய புரட்சி ஐரோப்பாவின் வரலாற்றின் திருப்புமுனையாகக் குறிப்பிடப்படுகிறது. (……)

**25. ஜெர்மன் ஐக்கியம்**

(1) ஜெர்மன் ஐக்கியமானது முப்பத்தொன்பது அரசுகளின் இணைப்பாகும்.
(2) ஜெர்மன் ஐக்கியம் வியன்னா மகாநாட்டில் தாபிக்கப்பட்டது.
(3) ஜெர்மன் ஐக்கியத்தில் ஆஸ்திரியா ஆதிக்கம் கொண்டிருந்தது.
(4) பிரஷ்யா ஜெர்மன் ஐக்கியத்தின் பலமான ஆதரவாளராக இருந்தது.
(5) 1866 ஆஸ்திரிய - பிரஷ்ய போரின் பின்னர் ஜேர்மன் ஐக்கியத்துக்குப் பதிலாக வடக்கு ஜெர்மனி ஐக்கியம் தோற்றம் பெற்றது. (……)

[பக். 5 ஐப் பார்க்க

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ……………………………………. **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ……………………………………. **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ……………………………………. **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ……………………………………. **4** எனவும்
**வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ………. **5** எனவும்
**அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின்** எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** மறுமலர்ச்சி தொடர்பாக பின்வரும் எந்தக் கூற்று/ கூற்றுகளில் எது/ எவை சரியானது/ சரியானவை?
(A) 'மறுமலர்ச்சி' என்ற சொல்லின் கருத்து பண்டைய கிரீஸ் மற்றும் உரோமின் மரபுவழி கலாசாரத்தின் மறுமலர்ச்சியாகும்.
(B) மேற்கு உரோம பேரரசின் வீழ்ச்சியானது மறுமலர்ச்சி இடம் பெறுவதற்கு வழிவகுத்தது.
(C) பாப்பரசர் பத்தாம் லியோ மறுமலர்ச்சி கலைஞர்களுக்கு ஆதரவளித்தார்.
(D) மறுமலர்ச்சிக் காலத்தில் கோதிக் கலாசாரம் வளம் பெற்றது. (……)

**27.** இங்கிலாந்துப் பாராளுமன்ற அரசாங்க முறைமையின் வளர்ச்சி தொடர்பாகப் பின்வரும் எந்தக் கூற்று/ கூற்றுகளில் எது/ எவை சரியானது/ சரியானவை?
(A) 1688 புரட்சியின் போது மன்னனுக்கு மேலாகப் பாராளுமன்றம் வெற்றி பெற்றது.
(B) பிரதம மந்திரிப் பதவி பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வேரூன்றியது.
(C) 1832 சீர்திருத்த சட்டத்தினூடாக சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது.
(D) 1911 இல் பிரபுக்கள் சபையின் அதிகாரம் குறைக்கப்பட்டது. (……)

**28.** நெப்போலியன் போனபார்ட் தொடர்பில் பின்வரும் எந்தக் கூற்று/ கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) நெப்போலியன் போனபார்ட் கிரோடின்களுக்குத் தலைமை தாங்கினார்.
(B) நெப்போலியன் போனபார்ட் 1804 - 1814 வரை பிரான்சின் பேராசனாக இருந்தான்.
(C) நெப்போலியன் போனபார்ட் 'புரட்சி என்பது நானே' என்று பிரகடனப்படுத்தினான் எனக் கருதப்படுகிறது.
(D) கண்டங்கள் முறை மூலம் நெப்போலியன் போனபார்ட்டுக்கு இங்கிலாந்தைத் தோற்கடிக்க முடிந்தது. (……)

**29.** 1917 ரஷ்யப் புரட்சி தொடர்பில் பின்வரும் எந்தக் கூற்று/ கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) ரஷயப் புரட்சி இரண்டு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தது; மார்ச் (பெப்ரவரி) புரட்சி மற்றும் நவம்பர் (ஒக்ரோபர்) பொல்ஷ்விக் புரட்சி
(B) 1917 புரட்சியின் பின் உலகின் முதல் கம்யூனிச அரசு தாபிக்கப்பட்டது.
(C) ரஷ்யப் புரட்சி அலெக்சாந்தர் கெரன்ஸ்கியினால் முன்னெடுக்கப்பட்டது.
(D) லியோன் ட்ரொஸ்கி முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (……)

**30.** சர்வதேச சங்கம் தொடர்பில் பின்வரும் எந்தக் கூற்று/ கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?
(A) வேர்சேல்ஸ் சமாதான மகாநாடு மூலம் 1919 இல் சர்வதேச சங்கம் தாபிக்கப்பட்டது.
(B) சர்வதேச சங்கத்தின் தலைமையகம் நியூயோர்க்கில் அமைக்கப்பட்டது.
(C) முக்கிய நோக்கங்களானவை கூட்டான பாதுகாப்பின் மூலம் சமாதானத்தைப் பேணுவதும் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிப்பதும் ஆகும்.
(D) ஐக்கிய அமெரிக்க அரசுகள் சர்வதேச சங்கத்தில் முக்கிய பங்கு வகித்தது. (……)

[பக். 6 ஐப் பார்க்க

- **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**31.** 'கடவுளின் நகரம்' (City of God) ஆக்கத்தை எழுதியவர் யார்?
(1) வண - ஜெரோமி (2) வண - அம்புரோஸ் (3) வண - அகஸ்டீன்
(4) வண பெனடிக்ற் (5) வண - தொமஸ் அக்குனாஸ் (……)

**32.** உரோமின் சிஸ்ரைன் தேவாலயத்தின் மேற்கூரையில் 'இறுதி தீர்ப்பு' ஓவியத்தை வரைந்த புகழ்பெற்ற ஓவியக் கலைஞர் யார்?
(1) ஜியோட்டோ (2) மஸஷியோ (3) பொட்செலீ
(4) வியனாடோ டாவின்சி (5) மைக்கல் ஆஞ்சலோ (……)

**33.** 1864 இல் டென்மார்க்குக்கு எதிராக ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவினால் போர்ப் பிரகடனம் செய்வதற்குக் காரணமான மோதல் எந்த மாகாணங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகியது?
(1) பீட்மவுண்ட்டும் சார்டீனியாவும் (2) லொம்பாட்டும் வெனிசீயாவும்
(3) நேபல்ஸ்ஸும் சிசிலியும் (4) ஷ்லெஸ்விக்கும் ஹொல்ஸ்டெயினும்
(5) அல்ஸஸும் லோறேசும் (……)

**34.** ரஷ்யாவில் அடிமைகளுக்கு விடுதலை வழங்கிய சார் மன்னன் யார்?
(1) முதலாம் அலெக்சாந்தர் (2) முதலாம் நிக்கலஸ்
(3) இரண்டாம் அலெக்சாந்தர் (4) மூன்றாம் அலெக்சாந்தர்
(5) இரண்டாம் நிக்கலஸ் (……)

**35.** அணிசேரா நாடுகளின் தலைவரான யூகோஸ்லேவியாவின் சனாதிபதி யார்?
(1) மார்ஷல் டிடோ (2) விலி பிரான்ட் (3) ஹெல்முட் ஷ்மிறிற்
(4) மிலொசெவிக் (5) லெஹ் வலேசா (……)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | உரோமுக்கும் கார்த்தேஜாவுக்கும் இடையிலான போர் பெலப்பொனீசியன் போர் என்று அழைக்கப்பட்டது. | மிலேச்ச ஆக்கிரமிப்புகளின் விளைவாக கிழக்கு உரோம சாம்ராச்சியம் வீழ்ச்சியடைதல் நிகழ்ந்தது. | (……) |
| **37.** | ஐரோப்பாவின் வரலாற்றின் மத்திய காலம் இருண்ட காலம் என வரலாற்றாசிரியர்கள் சிலர் வரைவிலக்கணப்படுத்தி உள்ளனர். | ஐரோப்பாவின் மத்திய காலத்தின் ஆரம்பத்தில் பிரதான கல்வி நிலையங்களாக இருந்த கதீட்ரல் பாடசாலைகள் சில பின்னர் பல்கலைக்கழகங்களாக வளர்ச்சியடைந்தன. | (……) |
| **38.** | வெஸ்ட்பேலியா உடன்படிக்கை நவீன ஐரோப்பாவின் வரலாற்றில் திருப்புமுனையாக கருதப்படுகிறது. | முப்பது ஆண்டு போர்களை முடிவுக்குக் கொண்டுவந்த வெஸ்ட்பேலிய உடன்படிக்கை ஐரோப்பாவில் சமயப் போர்களை முடிவுக்கு கொண்டுவந்து, நவீன அரசு முறைமை தோற்றுவதற்கு வழியேற்படுத்தியது. | (……) |
| **39.** | சரஜிவோ நகரில் ஆஸ்திரியாவின் இளவரசன் பிரான்சிஸ் பேர்டினனும் அவனது மனைவியும் கொலை செய்யப்பட்டமையே முதலாம் உலகப் போருக்கான உடனடி காரணமாகும். | ஷிரோஷிமா நாகசாகி என்பவற்றின் மீது அணுகுண்டு வீசப்பட்டதுடன் முதலாம் உலகப்போர் முடிவடைந்தது. | (……) |
| **40.** | ஸ்டாலினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நவீன பொருளாதார கொள்கை பனிப்போரின் ஆரம்பத்தை குறிப்பிடுகிறது. | மிக்கெல் கொர்பசேவ்வினால் பின்பற்றப்பட்ட கொள்கைகள் சோவியத் தேசத்தின் வீழ்ச்சிக்கு வழியேற்படுத்தியது. | (……) |

※ ※

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

| | | |
|---|---|---|
| යුරෝපා ඉතිහාසය II<br>ஐரோப்பிய வரலாறு II<br>History of Europe II | 25 B | T |

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. ....................................



Past Papers Wiki



සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

යුරෝපා ඉතිහාසය II (II කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி II)
History of Europe II (Part II)

25 B T II

ஐரோப்பிய வரலாறு - கிரேக்க-உரோம காலம் முதல் கி.பி. 1989 வரை

**அறிவுறுத்தல்கள் :**

※ நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
※ பகுதி II ஆனது A, B, C ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.
※ பகுதி A இன் வினா கட்டாயமானது.
※ பகுதி B, C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, மேலும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.
(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு ஐரோப்பாவின் புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேசப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | |
|---|---|---|
| (i) அட்ரியாட்டிக் கடல் | (ii) ரைன் நதி | (iii) பிரனிஸ் |
| (iv) பொஸ்பரஸ் நீரிணை | (v) சார்டீனியா | (vi) ஜெனோவா |
| (vii) அமஸ்ரடாம் | (viii) டென்மார்க் | (ix) அயர்லாந்து |
| (x) மஞ்செஸ்டர் | (xi) வியன்னா | (xii) கிரிமியா |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி)

## பகுதி B

**2.** (i) கிரேக்க நகர அரசு முறையின் பிரதான பண்புகளைப் பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

(ii) கிரேக்க நகர இராச்சியங்களில் நிலவிய பல்வேறுபட்ட அரசாங்க முறைகள் பற்றி விவரிக்குக. (08 புள்ளிகள்)

**3.** "தேசிய அரசுகள் வளர்ச்சியடைந்தமை மத்திய காலத்திலிருந்து நவீன காலத்துக்கு ஐரோப்பாவில் அரசியல் மாற்றம் நிகழ்ந்ததைக் குறிப்பிடுகிறது."

(i) பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டுகளில் தேசிய அரசுகள் வளர்ச்சியடைந்த **இரண்டு** ஐரோப்பிய நாடுகளின் பெயர் தருக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் பெயரிடப்பட்ட தேசிய அரசுகளை தாபிப்பதற்கு முன்னோடிகளாக விளங்கிய **இரண்டு** ஆட்சியாளர்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) தேசிய அரசுகள் என்பதால் கருதப்படுவது யாது என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(iv) ஐரோப்பிய நாடு ஒன்றை ஆதாரமாகக் கொண்டு தேசிய அரசு விருத்திபெற்ற விதத்தை விளக்குக. (09 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

**4.** பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமய சீர்திருத்தங்கள் இடம்பெறுவதற்கு இட்டுச் சென்ற பிரதான காரணிகளைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**5.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) இலக்கியம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் கிரேக்கர்களின் அடைவுகள்

(ii) பியூனிக் போர்களின் இறுதி வரை உரோம ஆதிக்கத்தின் பரவல்

(iii) கார்தினல் ரிச்சலியு

(iv) ஏழாண்டுப் போர்

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** (i) 1849 வரை இத்தாலியை ஒன்றிணைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஏன் தோல்வியடைந்தது? (06 புள்ளிகள்)

(ii) இத்தாலி எவ்வாறு ஒன்றிணைந்த அரசாகியது? (10 புள்ளிகள்)

**7.** "பாஸிஸவாதம் மற்றும் நாசிஸவாதம் வடிவில் இத்தாலியிலும் ஜெர்மனியிலும் ஏகாதிபத்தியவாதம் எழுச்சி பெறுதல் இரண்டாம் உலகப்போர் உருவாகுவதைத் தவிர்க்கமுடியாத நிலைமைக்கு உள்ளாக்கியது."

(i) இத்தாலியின் பாஸிஸவாதத் தலைவரின் பெயர் யாது? (01 புள்ளி)

(ii) ஜெர்மனியின் நாஸிஸவாதத் தலைவரின் பெயர் யாது? (01 புள்ளி)

(iii) பாஸிஸவாதம் மற்றும் நாசிஸவாதத்தின் பிரதான பண்புகள் பற்றிச் சுருக்கக் குறிப்பு எழுதுக. (04 புள்ளிகள்)

(iv) இத்தாலி மற்றும் ஜெர்மனியில் பாஸிஸவாதம், நாஸிஸவாதம் எழுச்சி பெறுதல் இரண்டாம் உலகப்போர் உருவாகுவதற்கு எந்தளவுக்கு வழிசமைத்தது என்பதைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

**8.** (i) ஐக்கிய நாடுகள் சபை தாபிக்கப்பட்டதின் முக்கிய நோக்கங்கள் யாவை? (03 புள்ளிகள்)

(ii) அது எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டது? (03 புள்ளிகள்)

(ii) 1980 வரை பிரதான பிணக்குகளைத் தீர்ப்பதில் ஐக்கிய நாடுகள் சபை அடைந்த வெற்றிகளை மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) காங்கிரஸ் முறை

(ii) சொல்வரீன்

(iii) லூயிஸ் நெப்போலியன்

(iv) பனிப் போர்

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library